Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 124

புதன்கிழமை
30 மார்ச் 2022

பங்குனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=



கொரோனா
நேற்று 232
மொத்தம் 6,61,285

உயிரிழப்பு
நேற்று 04
மொத்தம் 16,469

# தமிழரின் பிரச்சினைக்கு இந்த ஆட்சியில் தீர்வாம்!

- ஜனாதிபதியின் போக்கில் திடீர் மாற்றம்
- நெருக்கடியை சமாளிப்பதற்கான யுக்தி?



**கொழும்பு, மார்ச் 30**
**எனது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பேன். அதன் ஒரு கட்டமாகவே தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சை ஆரம்பித்துள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**

15

## மின்வெட்டு இன்று 10 மணிநேரம்

கொழும்பு, மார்ச் 30
இன்று நாட்டில் 10 மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. மின்துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

15

## அரசுக்கு 'வேட்டு' வைக்க மே மாதத்தில் பிரேரணை

கொழும்பு, மார்ச் 30
நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்ல வலியுறுத்தும் பிரேரணையை முன்வைக்க தயாராகி வருகின்றோம் என்று பிவிதுரு

15

## திடீர் சுகவீனமுற்ற இளம் பெண் சாவு!

*கீரிமலையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 30
திடீர் சுகவீனமுற்ற இளம் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கீரிமலை, கூவிலைச் சேர்ந்த கந்தசாமி

15



## வீடு உடைத்து திருட்டு: இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 30
நாவற்குழியில் வீடு உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால்

15

## தமிழக மீனவர்கள் நால்வர் நெடுந்தீவுக் கடலில் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 30
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் நால்வர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

14

## சந்தேகநபரை தேடிச்சென்ற பொலிஸார் மீது தாக்குதல்!

யாழ்., மார்ச் 30
சந்தேகநபர் ஒருவரைத் தேடிச் சென்ற சுன்னாகம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

15

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைவாக நடத்துமாறு அழுத்தம்!

*பிரதமரின் இணைப்பாளர் கீதநாத் மாவட்டச் செயலருக்கு கடிதம்*

யாழ்ப்பாணம், மார்ச் 30
பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று

14

## சிறுமிகள் துஷ்பிரயோகம் இதுவரையில் 7 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 30
முல்லைத்தீவு, புதுமாத்தளனைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15

## உண்டியல் உடைத்தவர் உடனே மாட்டினார்

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணையில் உள்ள இரு ஆலயங்களில் நேற்றுமுன்தினம் இரவு உண்டி

15

## நவக்கிரியில் மாயமான இளைஞர் கை, கால் கட்டிய நிலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 30
புத்தூர் மேற்கு, நவக்கிரியில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்

15

MOBILE
Viber விசே உடன் தமாஷாகுங்கள்



மெசேஜ், கோல்ஸ் மற்றும் வீடியோ கோல்ஸ் ஆகியவற்றை
SLT Mobitel Mobile டேட்டா பெக் ஊடாக
இலவசமாக எல்லையின்றி அனுபவியுங்கள்
மேலதிக விபரங்களுக்கு www.mobitel.lk/freeviber இங்குள் பிரவேசியுங்கள்
அல்லது #170# அழையுங்கள்
Rakuten Viber
SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சியில் வணிக நோக்கத்துக்காக நிலத்தடி நீரெடுக்கத் தடை

### பிரதேசசபையில் தீர்மானம்



**கொடிகாமம், மார்ச் 30**

**தென்மராட்சிப் பிரதேசத்தில் வணிக நோக்கத்துடன் நீரை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில், சபை அனுமதியுடன் மட்டுமே இனிவரும் காலங்களில் நீரெடுக்க முடியும் என்று சாவகச்சேரி பிரதேசசபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தென்மராட்சியில் நிலத்தடி நீரை வணிக நோக்கத்துக்காக எடுப்பதும், விற்பனை செய்வதும் முற்றாகத் தடை செய்ய வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி நிரஞ்சன் கலைவாணி பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

பிரதேசத்தில் நிலத்தடி நீரானது சில தனியாரால் உறிஞ்சப்பட்டு குடிதண்ணீராக ஒரு பகுதியினராலும், வேறு வணிக நோக்கத்துக்காக பிறிதொரு பகுதியினராலும் பயன்படுத்தப்படுகின்றது. இது முற்றாகத் தடை செய்யப்படவேண்டும். சிலர் தனியார் காணிகளைச் சொந்தமாக கொள்வனவு செய்து அல்லது வாடைக்குப் பெற்று அந்தக் காணிகளில் இருந்து நிலத்தடி நீரை அகழ்ந்து அரச திணைக்கள கடிதங்களின் உதவியுடன் வணிகம் செய்கின்றனர். இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் நிலத்தடி நீரின் சுவை மாறுபடுவதுடன் பலருடைய கிணறுகளில் நீரின் மட்டம் குறைந்து வருகின்றது. அத்துடன் விவசாயம் செய்வதற்கான தண்ணீருக்கும் மற்றும் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அவர் பிரேரணையில் குறிப்பிட்டார்.

அதற்கமைவாக பிரதேசத்தில் 20 லீற்றருக்கு மேல் நீர் எடுக்க முடியாது. ஒருநாளைக்கு நான்கு தடவையே நீர் எடுக்க முடியும். இரவில் எடுக்க முடியாது. ஒவ்வொரு தடவையும் தண்ணீர் எடுக்கும்போது கைதடி உப அலுவலகத்தில் பதிவுசெய்ய வேண்டும் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

(ம-4-159)

## பயனாளிகளுக்கு மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

'வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் பணிகள்' என்ற தலைப்பின் கீழ் 'பசுமையான நாடு ஆரோக்கியமான நாளை' என்னும் கருப்பொருளில், பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்குகின்ற ஆரம்ப நிகழ்வு சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/160 கிராம அலுவலர் பிரிவில் நேற்று நடைபெற்றது. இதன்போது கத்தரி, வெண்டி, தக்காளி மற்றும் மிளகாய் ஆகிய பயன் தரு கன்றுகள் வழங்கப்பட்டதுடன் வீட்டுத்தோட்டம் அமைப்பதன் அவசியம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

மேலும் குறித்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 156 மரக்ஈன்றுகள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் பொ.பிறேமினி, உதவித் திட்டப் பணிப்பாளர், ஜே/160 கிராம அலுவலர் பிரிவின் செயலாளர், செயலக உத்தியோகத்தர்கள் சமூகமட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ம-4-27)





## புவி மணித்தியாலத்தில் 10,000 சிட்டிகள் ஒளிர்வு

கிளிநொச்சி, மார்ச் 30

சர்வதேச புவி தினத்தை முன்னிட்டு பத்தாயிரம் சிட்டி விளக்குகள் ஏற்றும் விசேட நிகழ்வு விடியல் ஆடைத்தொழிற்சாலையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பசுமை பூங்காவில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது புவி மணித்தியாலமான 08.30 - 9.30 மணிவரையான காலப்பகுதியில் மேற்படி சிட்டிகள் ஏற்றப்பட்டு புவிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

(ய-113)

## மணல் அகழ்வை தடுக்குமாறு கெற்பேலி மக்கள் கோரிக்கை

### பிரதேசசபையிலும் பிரேரணை

கொடிகாமம், மார்ச் 30

மணல் அகழ்வைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கெற்பேலி கிராம மக்கள், சாவகச்சேரி பிரதேசசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் அவர்களது கோரிக்கை மாதாந்த சபை அமர்வில் பிரேரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கெற்பேலி கிராம மக்களாகிய நாங்கள் எமது வாழ்வாதார தொழிலாக விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றோம். எமது கிராமத்தில் தெற்குப் பகுதிக் கடற்கரைப் பிரதேசமாகையால் அதற்கு அண்மையாகவுள்ள காணிகளில் மணல் அகழ்வு சட்ட விரோதமாக தொடர்ந்தும் அகழப்பட்டு வருகின்றது. இதனால் எமது காணிகளுக்குள் கடல்நீர் உட்புகுவதற்கும், விவசாயம் செய்யும் நிலப்பரப்புகள் உவர் நிலமாக மாறுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

எனவே எமது பிரதேசத்தின் இயற்கைப் பாதுகாப்பை உறுதிசெய்ய அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைவாக மக்கள் வழங்கும் தகவலை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம-4-159)



## சிறுபோகத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரம்

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட மன்னாங்கண்டல் பகுதிகளில், சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சேதன உரம் வழங்கப்பட்டது.

அதற்கமைவாக மன்னாங்கண்டல் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட 135 ஏக்கர் வயல் நிலங்களுக்கும், மூன்றாம் கண்டம் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட 120 ஏக்கர் நிலங்களுக்குமான நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுகந்தன் தலைமையில், கமநல சேவை நிலைய ஊழியர்கள் குறித்த பகுதிக்குச் சென்று விவசாயிகளுக்கான உரத்தை விநியோகித்தனர்.

(ம-4-19)

## அதிகாரிகள் துணையுடன் செட்டிகுளத்தில் காடழிப்பு



செட்டிகுளம் பகுதியில் அதிகாரிகளின் ஆதரவுடன் தொடர்ந்தும் காடழிப்பு இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரமணாலங்குளம் கிராம அலுவலர் பிரிவில், கூழாங்குளம் பகுதியில் 200 ஏக்கருக்கு மேற்பட்ட காட்டுப்பகுதி வவுனியா நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்துபவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. அங்குள்ள அரச அதிகாரிகளின் துணையுடன் காட்டுப் பகுதிகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன.

கண்ணாட்டி, கூழாங்குளம், கணேசபுரம், நீலியாமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பலரும் தமது விவசாயம் மற்றும் வாழ்வாதார தேவைக்காக போதியளவிலான நிலமின்றி அவதிக்குள்ளாகியுள்ள நிலையில், பெரிய பண முதலைகள் வேறுபகுதியில் இருந்து சென்று அந்தப் பகுதியில் அரச அதிகாரிகளின் துணையுடன் காடழித்து நிலங்களை அபகரித்து வருகின்றனர். இது தொடர்பில் மக்களால் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியும் காடழிப்பு நடவடிக்கைகளும், அங்கு இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தடுத்து நிறுத்தப்படவில்லை. இது தொடர்பில் எனக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று, நிலமைகளைப் பார்வையிட்டேன். வனவளத் துறையினர் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி, காடழிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்தியதுடன், மாவட்டச் செயலருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன் -என்றார்.

(ம-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு, கிழக்கில் இடம்பெறும்

# போராட்டங்களை மட்டும் அடக்கமுயல்வது சரியா?

## நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம்

**யாழ்ப்பாணம், மார்ச் 30**

**நாடு முழுவதும் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றபோதும், வடக்கு, கிழக்கில் இடம்பெறும் அமைதிவழிப் போராட்டங்கள் மட்டும் இரும்புக்கரங்களால் அடக்கப்படுகின்றன என்று யாழ். கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் தமது எதிர்ப்பைச் சாத்வீகமான முறையில் வெளிப்படுத்த முயன்றனர். அவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டமையையும், அநாகரிகமாக நடத்தப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வாழ்வாதார உதவியாக ஒரு முறை மட்டும் வழங்கும் அரசின் திட்டத்தை கடந்த 5 வருடங்களாக இவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியாகவே நாம் பார்க்கின்றோம். இவர்கள் அரசிடம் கையளித்த தமது கணவர்மார்களையும், பிள்ளைகளையும் தமக்குத் தருமாறு அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றே கேட்கின்றனர். ஒரு பொறுப்பான மறுமொழியே அவர்களுக்குத் தேவை. தவிர இழப்பீடோ அல்லது இறப்புச் சான்றிதழ்களோ அல்ல.

போதாக்குறைக்கு கூட்டமைப்புடன் நடந்த பேச்சில் காணாமலாக்கப்பட்டவர்கள் காணாமல் போனதன் பின்னணிபற்றி ஆராய ஒரு குழு ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டமை மேலும் காலத்தை இழுத்தடிக்கவும், பொறுப்புக் கூறவேண்டியவர்களைப் பாதுகாக்கவும் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு யுக்தியே - என்றுள்ளது. (ம-4-இ)

# யோசேப்பு ஆண்டகைக்கு நினைவேந்தல் பேருரை

மன்னார், மார்ச் 30

தமிழ்த் தேசிய அறவுணர்வுடன் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக் குரலாய் பல சவால்களுக்கு மத்தியிலும், அறப்பணி புரிந்த மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தலை முன்னிட்டு, நினைவுப் பேருரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, மட்டக்களப்பு - திருமலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்வர்.

அரங்க அறிமுக உரையை மனித உரிமை தொடர்பாகச் செயற்படும் அருட்பணி எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளாரும், நினைவுப் பேருரையை 'தமிழ்த்தேசிய இருப்பில் அமரர் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வகிப்பாகம்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கமும் ஆற்றுவர். (ம-4-60)

# கஞ்சா வளர்த்தவருக்கு ஏப்ரல் 4 வரை மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 30

உரும்பிராயில், வீட்டில் வைத்து கஞ்சாச் செடி வளர்த்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டிலிருந்து மூன்று கஞ்சாச்செடிகள் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4-23)

# அடைக்கலம் கோரும் இலங்கையருக்கு தமிழக முதலமைச்சர் உதவவேண்டும்

## செல்வம் எம்.பி கோரிக்கை



வவுனியா, மார்ச் 30

இலங்கையில் வாழமுடியாதென்று இந்தியாவுக்குச் செல்லும் உறவுகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் உதவ வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. மக்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பிள்ளைகளுக்கு சரியான முறையில் உணவுகொடுக்க முடியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் உணவுப் பொருள்களின் விலை மிக உயர்வடைவதால், அன்றாடம் உழைக்கின்றவர்கள் பட்டினியை எதிர்கொள்கின்ற நிலை உருவாகி இருக்கின்றது. அதனால் இந்தியா செல்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அது தவிர்க்க முடியாதது. சட்டவிரோதச் செயற்பாடாக இருந்தாலும்கூட, இலங்கையில் பட்டினியால் இறப்பதைவிட இந்தியா செல்லலாம் என்று மக்கள் நினைக்கின்றனர். எனவே இந்திய அரசாங்கம் எமது உறவுகளை நீதிமன்றை அணுகவைத்து சிறப்பு முகாம்களில் அடைக்காது, மக்கள் ஏற்கனவே தங்கியிருக்கின்ற முகாம்களில் இவர்களையும் தங்கவைக்க வேண்டும் - என்றார். (ம-4-110)




இந்தியாவின்ர வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூட்டமைப்புக்காரரோட சந்திச்சவரெல்லோ. மீடியாக்காரரே போகேலாத அந்தச் சந்திப்பில என்னென்ன கதைச்சவை எண்டு, சந்திப்பு முடிஞ்ச அரைமணித்தியாலத்திலேயே இணையங்களில வந்திட்டு. அந்தச் சந்திப்புக்கு போன ஆக்கள் இல்லாட்டி தூதரகத்தைச் சேர்ந்தவைதான் அப்பிடிச் செய்தியை வெளியில விட்டிருக்க வேணும். இப்ப பிரச்சினை அதில்லை. 'மூடின அறைக்குள்ள நடந்த சந்திப்பு விசயம் என்னெண்டு மீடியாக்களில வந்தது? இதை வெளில விட்டால் பிறகு ரண்டு நாட்டு அரசாங்கத்துக்கும் உறவில விரிசல் வந்திடுமே' எண்டு கொழும்பில உள்ள இந்தியன் எம்பஸிக்காரர் பதை பதைச்சிருக்கினம். எப்பிடியாவது அந்தச் செய்தியை பொய் எண்டு சொல்லி, அதை அடுத்த நாள் உதயன் உள்ளிட்ட பேப்பருகளில வரவிடாமல் தடுக்கோணும் எண்டு அவை கூட்டமைப்புக்காரருக்குச் சொல்லி இருக்கினம்.

அவிச்ச மீன் துடிக்கிறதெண்டு சொல்லுறதில பேர்போன ஒராள் கூட்டமைப்பில இருக்கிறார்தானே. அவர் வேற ஆருமில்லை, சாட்சாத் அதே சட்டாம்பியார்தான். அவர் அந்தச் செய்தி வந்த இணையங்களிட்ட 'உப்பிடி எல்லாம் அங்க பேசுப்படேலை. நீங்கள் இல்லாததைப் போட்டு சனத்தையும் குழப்பி, எங்கட இனத்துக்கு கிடைக்கவேண்டிய நன்மையையும் இல்லாமல் செய்யப் போறீங்கள்' எண்டு தூண்டிலைப் போட்டிருக்கிறார். அதையும் நம்பி சில இணையக்காரர் அந்தச் செய்தியை அப்பிடியே தூக்கிப்போட்டினம். ஆனால் பேப்பருகளை இப்பிடி டீல் பண்ண ஏலாதே. அதால வேற வேற வழியளில பேப்பர்காரருக்கு 'அந்தச் சந்திப்பில பேசின விசயங்கள் எண்டு நெற்றில வந்தது எல்லாம் பொய். அதை நம்பி செய்தி போட்டுடாதையுங்கோ' எண்டு சாமம்வரை ஒரே போன் மழைதான். ஆனால் பேப்பர்காரர் தங்களுக்கு செய்தி தந்தவையளிட்ட திரும்ப 'அதில பேசுப்பட்ட விடயங்கள்' எல்லாத்தையும் உறுதிப்படுத்த போன் பண்ணி இருக்கினம். அப்பவும் அவையள் 'நாங்கள் சொன்னதில ஒரு வரி விடாமல் அங்க நடந்தது. ஒண்டும் பொய்யில்லை' எண்டு சொல்லியிருக்கினம்.

அதுக்குள்ள, இந்தச் சந்திப்பு பற்றி இந்தியன் எம்பஸியும் இரவோடு இரவா ஒரு அறிக்கையும் அனுப்பிட்டுது. பேப்பருகள் முதல் வந்த செய்தியை விட இதுக்கு முக்கியத்துவம் குடுப்பினம் எண்டு அவை நம்பிச்சினம். அப்பிடி அவை அனுப்பின அறிக்கைக்கு முக்கியத்துவம் குடுத்தால், முதல் வந்த செய்தி பொய் எண்டு சனமே நம்பிடுமெண்டது அவையின்ர கணக்கு. ஆனால் பேப்பர்காரர் எதுக்கு முக்கியத்துவம் குடுக்கோணுமோ அதுக்கு முக்கியத்துவம் குடுத்து செய்தியைப் போட்டிட்டினம்.

இரவிரவா சட்டாம்பியார் எத்தனையோ வழியளில சந்திப்பில நடந்த உண்மையளை வெளில வரவிடாமல் எடுத்த எல்லா இராஜதந்திரங்களும் இப்படி வீணாகி விட்டனவே?



- பக்ஸி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களால் மக்களுக்கு மனஅழுத்தம் கூடுகிறதாம்

## அமைச்சரின் கண்டுபிடிப்பு



**கொழும்பு, மார்ச் 30**

**மக்கள் கஷ்டப்படும் மிகவும் சிரமமான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்களுக்கு மேலும் கஷ்டங்களை ஏற்படுத்தி மக்களை மனரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாக்க வேண்டாம் என ஊடக நிறுவனங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.**

இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கண்டி கலகெதர பிரதேசத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சில ஊடகங்கள் மக்கள் எரிபொருளைக் கொள்வனவு செய்ய வரிசையில் நிற்கும் காட்சியை மீண்டும் மீண்டும் ஒளிப்பரப்பு செய்து, நாட்டில் மிகவும் பயங்கரமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று காட்ட முயற்சித்து வருகின்றன. கொரோனாத் தொற்று காரணமாக நாளாந்த வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாது உலகில் அனைத்து நாடுகளிலும் பெருந்தொகையான மக்கள் மனநல சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக நாம் முன்பு கூடுதல் கவனத்தைச் செலுத்தாவிட்டாலும் தற்போது இந்த விடயம் தொடர்பாக சிறப்புக் கவனத்தை செலுத்தி செயற்பட்டு வருகின்றோம். ஊடகங்களில் காட்டப்படும் விடயங்கள் சர்வதேசம்வரை செல்லும். இது நாட்டுக்குத் தேவையற்ற பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

முக்கியமாக சர்வதேச முதலீட்டாளர்களின் வருகைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அரசாங்கத்தை மாற்றுவதன் மூலம் தீர்வை எட்டும் நிலைமை காணப்படவில்லை என்பதை இரண்டு பிரதான கட்சிகள் ஏற்றுக்கொண்டு, சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டமை சிறந்த முன்னேற்றம்.

நல்லெண்ணத்தில் ஜனாதிபதி சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டினார். எனினும் இப்போதுள்ள நிலைமையை சாதகமாக பயன்படுத்தி ஆட்சியை பிடிக்கவேண்டும் என காத்திருக்கும் தரப்பினர் மாத்திரம் அதில் கலந்துக்கொள்ளவில்லை- என்றார். (எ-இ)

# எரிவாயு சிலிண்டர் பதுக்கலை கண்டுபிடிக்க சிறப்புத் திட்டம்!

கொழும்பு, மார்ச் 30

பதுக்கப்பட்டுள்ள எரிவாயு இருப்புக்கள் மற்றும் அதிக விலைக்கு எரிவாயு விற்பனை செய்யும் இடங்களைக் கண்டறிய நுகர்வோர் விவகார அதிகாரசபை விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

சில பகுதிகளில் எரிவாயு விற்பனை முகவர்கள் எரிவாயு கொள்கலன் கையிருப்பை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்று நுகர்வோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

சில எரிவாயு விற்பனை முகவர்கள் எரிவாயு அடங்கிய கொள்கலன்களை 4 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்கின்றனர் என்றும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதையடுத்து நுகர்வோர் விவகார அதிகாரசபை நாடளாவிய ரீதியில் விசேட நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளது. சில எரிவாயு விநியோகஸ்தர்களின் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் எரிவாயு நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ-இ)

# 74ஆண்டு அரசியல்முறையை ஒழித்தாலே நாட்டுக்கு விடிவு!

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

அரசாங்கத்தை விரட்டியடிப்பது இலகுவானது என்றாலும் 74 வருடகால அரசியல் முறையை விரட்டியடிப்பதே கஷ்டமானது எனத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

74 வருடகால அரசியல் முறையை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களை ஒன்றுதிரட்டி நாடு முழு வதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுதான் எமக்கு இருக்கும் உடனடியான உபாயம்.

அவர்கள் அதனைச் செய்வார்களா? இல்லை என்பதன் அடிப்படையில் அடுத்தகட்டப் போராட்டங்கள் நகரும். 'மக்கள் விரோத அரசாங்கத்தை விரட்டியடிப்போம்' என்ற தொனிப் பொருளில் நாம் மக்களை ஒன்றிணைக்க வேண்டும். 74 வருட சாபத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். 74 வருடகால அரசியல் முறையை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (எ-இ)

# நேர்மையானவர்களிடம் பொறுப்பைக் கொடுங்கள்

## வலியுறுத்துகிறார் சம்பிக்க



கொழும்பு, மார்ச் 30

இலங்கை மின்சார சபை, மத்திய வங்கி, நிதியமைச்சு போன்றவற்றை நேர்மையான திறமையானவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் நாட்டைக் காபந்து அரசாங்கமொன்று நிர்வகிக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தால் தனது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. டீசல் விலை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இலங்கை மின்சார சபை யின் நிர்வாகம் பயனற்றதாக மாறியுள்ளது. ஏப்ரல் மாதமளவில் இலங்கையின் மின்சாரக் கட்டமைப்பு முறை முற்றாகச் செயல் இழக்கலாம். இலங்கை மின்சார சபை, மத்திய வங்கி, நிதியமைச்சு போன்றவற்றை நேர்மையான திறமை யானவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# பஞ்சத்தையும் பசியையும் நாடு எதிர்நோக்கும் நிலை

## பேராசிரியர் ஜயவிக்ரம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

அளவற்ற விகிதாசாரங்களில் பண நோட்டுக்களை அச்சிட்டமை நாட்டின் பண வீக்கத்துக்கு இட்டுச்சென்றுள்ளது. மக்கள் விரைவில் உணவைப் பெற்றுக் கொள்ள முடியாத பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவர் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பண நோட்டுக்களை வகைதொகையின்றி அச்சடித்த பல நாடுகள் பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன. ஜேர்மனியும் சிம்பாப்வேயும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இரண்டாம் உலக போரில் பாதிப்புற்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஜேர்மனியும் 2007ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களை இழந்த வெளிநாட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு சிம்பாப்வேயும் பணநோட்டுகளைப் பெருமளவில் அச்சிட்டன. இதே விதமான ஒரு நிலைமையே இலங்கையிலும் உருவாகி வருகின்றது - என்றார். (ம-ரி1)




இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிஷேச பணியகத்தின் சேவைகளைப் பாராட்டும் விதமாகவும், சபையின் இணை நிறுவுநர் கலாநிதி மாக்ரெட் ராஜேந்திரத்தைக் கௌரவிக்கும் வகையிலும் தபால் தலையொன்று இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# கொழும்பு - மொஸ்கோ இடையே விமான சேவை இடைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 30

கொழும்புக்கும் மொஸ்கோவுக்கும் இடையிலான விமான சேவைகளை நேற்றுமுன்தினம் முதல் இடைநிறுத்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போர் காரண [illegible] சர்வதேச நிதி மற்றும் விமானக் காப்புறுதி வரம்புகள் தொடர்பில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. இந்தக் கட்டுப்பாடுகள் ரஷ்யாவுக்கான ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸின் விமான நடவடிக்கைகளை நேரடியாக பாதிக்கும். இதன்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மறு அறிவித்தல்வரை மொஸ்கோவுக்கான நடவடிக்கைகளை நிறுத்தவுள்ளது. ரஷ்யாவின் நிலைமையை ஸ்ரீலங்கன் தொடர்ந்து கண்காணிக்கும்.

நிலைமைகள் மேம்பட்டவுடன் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் என நம்புகிறது. செயற்பாடுகள் நிறுத்தப்படுவதற்கு முன்னர் கொழும்பு மற்றும் மொஸ்கோவுக்கு இடையில் ஸ்ரீலங்கன் இரண்டு வாராந்த விமான சேவைகளை முன்னெடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகை அலங்காரிப்புக்கும் அதிகரிக்கின்றது கட்டணம்

முல்லைத்தீவு மாவட்ட அழகக சங்கம் சிகை அலங்கார நிலையங்கள் ஊடாக வழங்கப்படும் சிகை அலங்கார சேவைகளுக்கான விலையை அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நாளைமறுதினம் தொடக்கம் இந்த விலை அதிகரிப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகை அலங்கார நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-19)

# தடுப்பூசி ஏற்றல்

மீசாலை வடக்கு மற்றும் இராமாவில் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான கொரோனாத் தடுப்பூசி இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை கிராம அலுவலர் பிரிவில் ஏற்றப்படும்.

இன்று மீசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும், நாளை இராமாவில் பிரிவு மக்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும். (ம-4-9)


# பதவி வெற்றிடம்

**கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின்**

**மின் இணைப்பு** மற்றும் **பைப்லைன்** ஆகிய வேலைகளை இல்லத்தில் முழுநேரம் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய தொழிநுட்ப அலுவலர் தேவை

**தகைமைகள்**

1. வயதெல்லை 25-50 வயதிற்கு உட்பட்டவர்கள் தேவை.
2. தொழில் தகைமை சான்றிதழ் (NVQ) உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
3. நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் எதிர்வரும் 05.04.2022 இற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்களின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க முடியும்.

**தொடர்பு முகவரி**

**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி**

0214923118, 0773240950

cr.37732) (2.6)


# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 03 . 1948



மறைவு 29 . 03 . 2022

## Dr.நளாயினி ஞானதேவன்

இல.732. பருத்தித்துறை வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பினை தற்காலிக வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்து வந்தவருமான Dr.நளாயினி ஞானதேவன் அவர்கள் நேற்று (29.03.2022) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் கமலாவதி தம்பதியரின் அன்பு மகளும், துரைச்சாமி ஞானதேவன் அவர்களின் பாசமிகு மனைவியும், திரு. திருமதி துரைச்சாமி தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் யுதிஷ்ரா குலசேகரம் (வைத்தியர்), சிறிதரா (வைத்தியர் - அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரணியா (யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு தாயாரும், நிமலன் (ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப- 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 671 4990

தகவல்:
மகள்.

(CS 19…)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 15.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் திரு. விஸ்வலிங்கம் சிவானந்தம் B.A (Hons)

**(இளைப்பாறிய விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 01.04.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி தெற்கு,
அராலி.

குடும்பத்தினர்.

(CS 19127) (1.6)

# சிவஐக்கிய அறிவித்தல்

அன்னை மடியில் 23 . 03 . 1945



சந்நிதியான் அடியில் 29 . 03 . 2022

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## கலாபூஷணம்
## சிவத்திரு வல்லிபுரம் குமாரசாமி ஐயா

**(ஞானஏந்தல், வாரியார் வாரிசு, சிவானந்தவாரிதி, வண்டமிழ் வேந்தர், சைவத்தமிழ் இசை வாரிதி)**

அவர்கள் நேற்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை முருகன் அடியை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கமலாட்சி அம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், கலாநந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவமணி ஐயா நீலயதாட்சி அம்மா தம்பதியரின் மருமகனும், பவளக்கொடி, அமரர் சறோஜினிதேவி, சற்குணதேவி, பிறைசூடி, சகுந்தலாதேவி, சாரதா்தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர் இரத்தினானந்தம், ஞானசேகரம், லோகேஸ்வரன், சுகந்தி, ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், சறோஜ்குமரன், ஹன்ஸ் ரூபினி, அருள்ராஜ், தாரணி ஆகியோரின் பாசமிகு மாமனும் கமல் ராஜ், கமலினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை அவரது சகோதரியின் இல்லம் (அருள்பவனம், சூராவத்தை, சுன்னாகம்) இல் இடம்பெற்று மதியம் 1.30 மணியளவில் குப்பிளான் கடம்பைக்கு சமாதி நிகழ்விற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அடியார்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 4717 296
077 132 5589
077 5580 098


தகவல்:
குடும்பத்தினர்

(CS 19129) (1/8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி அடைந்தார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசி யான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங் கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

மனிதர்களின் மனநிலையை நொடிப்பொழுதில் புரிந்துகொள்ளும் அசாத்திய ஆற்றல் உள்ள மக ரராசியினரே! துவண்டு வருவோருக்கு தோள் கொடுக்கும் சுமைதாங்கி நீங்கள். புரட்சிகரமான எண்ணங்கள் உடைய நீங்கள், மனிதநேயத்தை மழுங்கவைக்கும் மூடச் சிந்தனைகளைத் தூக்கி எறிவீர்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும், கேதுவும் இணைந்து என்ன மாற்றத்தைத் தருவார்கள் என்று பார்ப்போம்.

இதுவரை உங்கள் ராசிக்கு ஐந்தாம் வீட்டில் அமர்ந்து இழப்பு, ஏமாற்றம், விரக்தி என நாலாபு றமும் வாட்டி வதைத்த ராகு பகவான், இப்போது ராசிக்கு நான்காவது வீட்டில் வந்து அமர்கிறார். இனி மன நிம்மதியைத் தருவார். பாதியிலேயே நின்று போன வேலைகளையெல்லாம் இனி பக்குவமாய் பேசி முடிப்பீர்கள். நண்பர்கள், உறவினர்கள் என மாறி மாறி உங்களை ஏமாற்றினார்களே... இனி அவர்களெல்லாம் உங்களிடம் மன்னிப்புக் கேட் பார்கள்.

கணவன் மனைவிக்குள் கசப்பு உணர்வு நீங்கும். தாம்பத்தியம் இனிக்கும். அதேநேரம் இருவரும் தங்களின் ரத்த சொந்தங்கள் பற்றிப் பெருமை பேச வேண்டாம். வீட்டில் தாமதமாகிக் கொண்டிருந்த சுபகாரியங்கள் ஏற்பாடாகும். இரத்த அழுத்தம், நரம் புக் கோளாறு வரும். தாய்வழி உறவினர்களால் வீண் அலைச்சலும், கருத்து வேறுபாடுகளும் வந்து போகும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டி வரும். சிலர் நகரத்திலிருந்து விலகி சற்றே ஒதுக் குப்புற மான பகுதிகளுக்குக் குடி பெயர்வார்கள்.

**ராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதத் தில் ராகு பகவான் செல்வதால், வாழ்க்கைத் துணைவர் வழியில் மருத்துவச் செலவுகள் வந்து நீங்கும்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் பணத்தட்டுப்பாடு நீங்கும். திருமணம் கூடி வரும். விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள்.




**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அசுவினி நட்சத்திரத் தில் ராகு செல்வதால் புண்ணிய ஸ்தலங் களுக்குச் சென்று வருவீர்கள்.

**வியாபாரத்தில்:** பெரிய முதலீடுகளால் போட்டிகள் ஒருபுறமிருந்தாலும் ராஜ தந்திரத்தால் லாபத்தைப் பெருக்குவீர்கள். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசி வருமதிகளை வசூலிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் வேலையை விரைந்து முடிக்கப் பாருங்கள்.

**உத்தியோகத்தில் :** சக ஊழியர்களின் ஆதரவு உண்டு. கணினித் துறையில் இருப்பவர்களுக்கு அதிக சம் பளத்துடன் அயல்நாட்டில் வேலை கிடைக்கும். கலைத் துறையினரைப் பற் றிய வீண்பழி விலகும். பெரிய நிறுவனங்களிலிருந்து புது வாய்ப்புகள் வரும்.

**கேதுவின் பலன்கள்:** இதுவரை உங்களின் ராசிக்கு பதினோராவது வீட்டில் அமர்ந்து பணப் புழக்கத்தை யும், பிரபலங்களின் நட்பையும் ஏற்படுத்திக் கொடுத்த கேது பகவான், இப்போது பத்தாவது வீட் டில் வந்து அமர்கிறார். ஆகவே, எந்த வேலையை யும் திறம்படச் செய்து முடிக்கும் மனோபலத்தைத் தருவார். அதேநேரம் இரண்டு மூன்று முறை அலைந்து திரிந்து காரியத்தை முடிக்கவேண்டி வரும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். உங்களை ஏமாற் றிக் கொண்டிருந்தவர்களை இனம் கண் டறிந்து ஒதுக்குவீர்கள். சொந்தபந்தங்க ளுடன் இருந்த நெருடல்கள் நீங்கும். பாதியில் முடங்கிக் கிடந்த வீடு கட்டும் பணி முழுமையடையும். ஏளனமாகவும், இழி வாகவும் திட்டியவர்கள் எல்லாம் இனி உங்களைப் பாராட்டுவார்கள்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்!**

21.03.2022 முதல் 24.09.2022 வரை: குரு வின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உதவுவார் கள். செல்வாக்குக் கூடும். திருமணம் முடியும்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் மற்றவர் களை நம்பி பெரிய முடிவுகளை எடுக்கவேண்டாம். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ் வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் பங்காளிப் பிரச்சினைகள் தீரும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது.

## இரக்கத்தின் குறியீடுகளாவோம்

**தவக்காலச் சிந்தனை**

"ஆண்டவர் கனிவும் இரக்கமும் கொண்டவர். மிகவும் கோலாகலமாக நடைபெற்றுக்கொண்டிருந்த திருமண நிகழ்வொன்றில் நாவூறவைக்கும் அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தன. மண்டப வாசலில் பல நாள்கள் உணவைக் காணாத ஏழைச் சிறுவனொருவன் தன் வயிற்றை நிரப்பிக்கொள்ள உள்ளேவர பலமுறை முயற்சித்தான். வாயிற்காவலன் அவனை அதட்டி விரட் டிக்கொண்டிருந்தான். உள்ளே உணவு பரிமாறும் இடத்தில் தட்டில் உணவெடுத்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் இரக் கம்கொண்டு தன் உணவை ஏழைச் சிறுவனுக்கு கொண்டு சென்று கொடுத்தான். விருந் தினர்கள் குற்ற உணர்வால் மௌனித்திருந்தனர். அன்று அந்த ஏழைக்குக் கடவுளாக இவன் தென்பட்டான்.

எல்லா மதங்களும் அன்பை யும் இரக்கத்தையும் அடிப்ப டையாகக்கொண்டே கடவுள் யார் என்று இவ்வுலகுக்கு எடுத்துச் சொல்கின்றன. வீதி விபத்தில் சிக்கி உதவியின்றித் தவிக்கின்றபோது எவராவது தோள்கொடுத்து உதவினால் கடவுள்போன்று வந்தார் என்கிறோம். கைவிடப்பட்ட நோயா ளியின் உயிர்காத்த மருத்துவரை நீங்கள்தான் கடவுள் வடிவில் காப்பாற்றினீர்கள் என்கிறோம். கடவுளின் மறு பெயர் இரக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றவே இறை மகன் கிறிஸ்து உலகுக்கு அனுப்பப்பட்டார்.

எனவே விண்ணகத் தந்தையின் இரக்கச் செயல்களின் விருப்பத்தை நிறைவேற்றும் நன்மக்களாக செயலாற்றி விண்ணக வாழ்வை எமதாக்குவோம். நாமும் எம்பெய ருக்கு இரக்கத்தை அடைமொழியாக்குவோம்.

**யேசுதாஸ், கொழும்புத்துறை**

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

21 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவங்க ளில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி சப் பறத்திருவிழாவும் 15ஆம் திகதி தேர்த்திருவிழா வும் 16ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெ றும் என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள் ளது. (ம-14)

## மகளிர் தினமும் கௌரவிப்பும்

சாவகச்சேரி, மார்ச் 30

சாவகச்சேரி பிரதேச சபையின் மகளிர் தினமும் கௌரவிப்பும் அண்மையில் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சமூக சேவையாளர்கள் நினைவுச் சின்னம் வழங்கக் கௌரவிக்கப்பட்டனர். அத்து டன் சுயதொழில் முயற்சியாளர்களும் கௌரவிக் கப்பட்டனர்.

பெண்கள் சிறுவர் மகளிர் அபிவிருத்திக்குழுத் தலைவி மல்லிகா பாலச்சந்திரன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் [illegible], உபதவிசாளர் செ.மயூரன், செயலாளர் கிரிஜா வாசுதேவன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ம-14,159)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசா லைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந் தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 13ஆவது சொற்பொழிவு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வல்வெட்டித்துறை வேவில் வீரகத்தி விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலை மையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நாவலர் குருபூசை, தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் கல்விப்பணி' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் செ.த.கும ரன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக் கான பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள் ளன. (ம-14)

## கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 30

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வு அதிபர் தி.அபராஜி தன் தலைமையில் நடைபெறும். (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"பிறரிடம் உள்ள நூறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட நம்மிடம் இருக்கும் ஒரு குறையையாவது போக்கவேண்டும்" - புத்தர்

## தமிழ்த் தேசியமென்பது...

வணிக நோக்கத்துக்காக நிலத்தடி நீரை அகழ்வதற்குத் தடைவிதித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது சாவகச்சேரிப் பிரதேசசபை. வெறும் பேச்சுடனோ அல்லது சம்பிரதாயபூர்வமான ஒரு தீர்மானமாகவோ அந்தத் திட்டம் இருந்துவிடக்கூடாது என்பதற்காக நிலத்தடித் தண்ணீரை அகழ்வதற்கு பின்பற்றவேண்டிய கட்டுப்பாடுகள் என்று சில இறுக்கமான நடைமுறைகளுக்கும் அது உத்தரவிட்டிருக்கின்றது.

இதன்படி, இனிவரும் நாள்களில் தென்மராட்சியில் நிலத்தடித் தண்ணீரை வணிக நோக்கத்துக்காக அகழ முடியாது. அவ்வாறு அகழ்வதாயின் அதிகபட்சமாக 20 லீற்றருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். இரவில் தண்ணீர் எடுக்கமுடியாது. ஒவ்வொரு தடவையும் தண்ணீர் எடுக்கும்போதும் பதிவுசெய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளையும் தென்மராட்சிப் பிரதேச சபை இறுக்கியிருக்கின்றது.


சட்டவிரோத தண்ணீர் அகழ்வென்பது இன்று பெரும் பூதம்போன்று வடக்கு மாகாணத்தை ஆட்கொண்டுள்ளது. எமது பிரதேசத்தில் சட்டவிரோதத் தண்ணீர் அகழ்வு இல்லை என்று சவால் விடக்கூடிய வகையில் எத்தனை நிர்வாக அலகுகள் இங்குள்ளன? பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் வந்துகுவியும் முறைப்பாடுகள் இந்தப் பெரும் பூதத்தனமான ஆக்கிரமிப்புக்கும் ஆபத்துக்குமான ஆகச் சிறந்த 'உயிர்ச்சாட்சியங்களாக' அமைகின்றன. இப்படியிருக்கையில் தென்மராட்சிப் பிரதேசசபை முன்னெடுத்த இந்த முன்மாதிரி நகர்வைப் பாராட்டித்தான் ஆகவேண்டும். ஆனால், வெறும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காகிதக் குப்பையாக இந்தத் தீர்மானம் இருந்துவிடாமல், உச்சபட்ச செயல்வடிவம் கொடுக்கப்படுவதை தென்மராட்சிப் பிரதேசசபை உறுதிப்படுத்தவேண்டும். அதைச் செய்யும்பட்சத்தில் உண்மையில் அதற்கு ஒரு 'சல்யூட்'.

சரி இப்போது ஒரு கேள்வி தமிழ்த்தேசியம் என்றால் என்ன?

கட்சிகளின் பெயர்களுக்கு முன்னால் 'தமிழ்த் தேசிய' என்று போட்டுக்கொண்டால் அது தமிழ்த் தேசியம் என்றாகிவிடாது. நடைமுறைச்சாத்தியமற்ற தீர்வுகளை முன்வைத்து மேற்கொள்ளப்படும் 'தமிழ்த் தேசிய' அரசியல் சதிராட்டங்கள் ஒருபோதும் தமிழ்த் தேசியமாகவோ அல்லது அதன் பிரதிபலிப்பாகவோ ஆகாது. தமிழ்த் தேசியம் என்பது இதயத்துடன் இரண்டறக் கலந்தது. அது ஆத்மார்த்தமானது. சாவகச்சேரிப் பிரதேச சபை முன்னெடுத்த இந்த இயற்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகூட தமிழ்த் தேசிய நடவடிக்கையே. எம் தமிழ்த்தேசத்தின் உயிர்நாடியான அருஞ்சொத்தை அழியவிடாமல் காப்பதும் தமிழ்த்தேசிய செயல் முனைப்புத்தான்.

வடக்கு – கிழக்கில் இடம்பெறும் சட்டவிரோதக் காடழிப்பு, மணல் அகழ்வு, தண்ணீர் அகழ்வு, இயற்கைப் பறிப்பு போன்றவற்றைத் தடுத்தலும் நிறுத்துதலும்கூட தமிழ்த் தேசியம்தான். விடுதலைப் புலிகள்கூட தமது தமிழ்த் தேசியமாக வெறும் அரசியல் நகர்வுகளை மட்டும் அடையாளப்படுத்தவில்லை. அவர்களின் தமிழ்த் தேசியத்தில் அரசியல் நகர்வுகளும் ஓர் அங்கமாக இருந்தனவே தவிர அது மட்டும்தான் தமிழ்த் தேசியம் என்றாக இருக்கவில்லை.

'இயற்கை எனது வழிகாட்டி' என்று தமிழ்த்தேசியப் பெருந்தலைவர் சொன்னதும் இதனைத்தான். மனிதன் இயற்கைக்கும், இயற்கை மனிதனுக்கும் அரண்கள் என்பது புலிகளின் எழுதப்படாத விதி. இவையெல்லாம் சேர்ந்ததுதான் தமிழ்த் தேசியம். இனி [illegible] உணர்ந்து செயற்படுவோம்.



இலங்கையில்

# அனைத்து மக்களுக்கும் சம உரிமை வேண்டும்!

### இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் மனோ தரப்பினர் எடுத்துரைப்பு

**கொழும்பு, மார்ச் 30**

**இலங்கை மக்கள் அனைவருக்கும் முழுமையான சம உரிமை வழங்கப்படவேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம், தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை விடுத்தது.**

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

இதுதொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலையக மக்களின் அபிலாஷைகள் தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு கூட்டணித் தலைவரால் விளக்கமளிக்கப்பட்டது. 13ஆவது திருத்தம் மூலமாக உருவாக்கப்பட்டுள்ள மாகாணசபைகள் முழு நாட்டுக்கும் உரித்தான அதிகாரப் பரவலாக்கல் இயந்திரம் என்பது வலியுறுத்தப்பட்டது.

இந்தியத்தரப்பில் மலையக மக்களுக்கு, குறிப்பாக தோட்டத்தொழிலாளர்களுக்கு கல்வி, சுகாதாரம், கலாசாரம், வீடமைப்பு ஆகிய துறைகளில் உதவிகளை இன்னமும் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

உலகளாவிய ரீதியில் இந்திய வம்சாவளி மக்கள் கூட்டிணைக்கப்படும் செயற்பாடுகளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களை முழுமையாக இணைத்துக் கொள்வதுபற்றி வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தார். எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டின்போது முழுப் பட்டினியில் இருந்து இலங்கை மக்கள் இந்திய உதவியால் காப்பாற்றப்பட்டுள்ளனர். அதேவேளை நாட்டு மக்களுக்கு உணவளிக்க முடியாத அவமானத்தில் இருந்து இந்த நாட்டு அரசும் தற்காலிமாகக் காப்பாற்றப்பட்டுவிட்டது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது.

நாம் எமக்குள் விரைவில் இவற்றுக்குத் தீர்வு காணுவோம் என்று கூட்டணித் தலைவர் மனோ கணேசன் வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தார் - என்றுள்ளது. (ம-4-இ)

# இலங்கை, இந்திய மீனவர் விவகாரம்; இரு தரப்பினரும் நேரடியாகப் பேச்சு!

கொழும்பு, மார்ச் 30

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கிடையிலான நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன், இரு தரப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரின் தலைமையிலான குழு இந்தப் பேச்சில் பங்கெடுத்தது.

இதன்போது இலங்கைக் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு இந்தியாவால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் விரிவாக ஆராய்ந்தனர். (ம-4-27)

நாளை 31.03.2022 வியாழக்கிழமை பங்குனி 17

சுபநேரம் : 07:42 - 09.12

ராகுகாலம்: 01.42 - 03.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணியாளர்கள் கடமைகளை முடித்து நிம்மதி காண்பார்கள். சீரான அணுகுமுறையால் குறிக்கோளை அடைவீர்கள். சிக்கனமாக இருக்கவேண்டுமென்று தீர்மானிப்பீர்கள்.

**இடபம்** திட்டமிட்ட செயல்களை முடிப்பீர்கள். சாதனை செய்வீர்கள்.முன்னேற்றத்துக்கான புதிய வழியைக் கண்டுபிடிப்பீர்கள்.உங்களது சிந்தனைகளை இன்று செயலாக்குவீர்கள்.

**மிதுனம்:** மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வீர்கள் நீண்ட நாள் கனவுகள் இன்று எதிர்பாராத வகையில் நிறைவேறும். பிறருடன் பேசும்போது நிதானத்தைக் கையாளவும்.

**கடகம்:** உங்களுக்கு நம்பிக்கை தரும் விஷயங்கள் இன்று நடைபெறும்.கடந்த காலக் கவலைகள் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பிக்கும். சில நல்ல முடிவுகளை இன்று எடுப்பீர்கள். நிதி நிலை சீராகும்.

**சிம்மம்:** நீண்ட காலம் உழைத்ததற்கான பயன் இன்று கிடைக்கும்.பயணத்தால் மகிழ்ச்சியும், உடல் சோர்வும் ஏற்படும்.வேலை கிடைப்பதற்கான முயற்சியைத் தீவிரப்படுத்துவீர்கள்.

**கன்னி:** நண்பர், உறவினர்களின் அருமையை உணர்வீர்கள்புதிய நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் வரவுசிறிதுஉயரும்.பணியாளர்களுக்கு திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** உழைப்பால் உயருவீர்கள். வீண் வம்புகளால் வந்த பிரச்சினைகள் தீரும். வாக்குவாதங்களால் உண்டான மன உளைச்சல் நீங்கும். பிறருடன் விட்டுக் கொடுத்துச் சென்று பிரச்சினையில் இருந்து வெளிவருவீர்கள்.

**விருச்சிகம்:** முன்பிருந்த கசப்பான அனுபவம், விரக்தி உணர்வும் உங்களைவிட்டு நீங்கும்.பிறருடன் கனிவாக பேசி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். அனுபவ அறிவு வெளிப்படும்.

**தனுசு:** குடும்பத்தில் கலகலப்பான உரையாடலால் வீடு களைகட்டும். வேலை சம்பந்தமாக அலைச்சல், அதிருப்தி வந்து நீங்கும். பணியிடத்தில் இருந்த சிரமங்கள் நீங்கும். பேச்சில் கவனமாயிருங்கள்.

**மகரம்:** நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உடல்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்சாகமான நாள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள்.

**கும்பம்** நீங்கள் எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். நீங்கள் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைப்பதில் தாமதமாகும். சோர்வு நீங்கித் துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள்.

**மீனம்** சில விடயங்களில் இறங்கி வரவேண்டியிருக்கலாம். குடும்பத்தினருக்காக செலவுகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். முன்பு மனஸ்தாபம் ஏற்பட்ட நபருடன் மனம் விட்டுப்பேசிச் சரி செய்வீர்கள்.

# போரைத் தூண்டாதீர்கள்

## பைடனுக்கு மக்ரோன் 'அட்வைஸ்'



**பாரிஸ், மார்ச் 30**

**ஒருபோர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்போது அந்தப் போரை மேலும் மோசமாக மாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிடக்கூடாது என்று பிரான்ஸ் அதிபர் மக்ரோன் அமெரிக்க அதிபர் பைடனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைமைப் பொறுப்பில் உள்ள பிரான்ஸின் அதிபர் என்ற வகையில் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதியாகவும் பிரான்ஸின் அதிபராகவும் அவர் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். இதுபோன்ற வார்த்தைகளை நான் பயன்படுத்தப் போவதில்லை. ஏனெனில் நான் புடினோடு தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறேன். உக்ரைனில் ரஷ்யா தொடங்கியுள்ள போரை நாங்கள் போருக்குச் செல்லாமலேயே நிறுத்த விரும்புகிறோம். இதுவே எங்கள் குறிக்கோள். நாம் அதைச் செய்ய விரும்பினால், நமது வார்த்தைகளையோ செயலையோ தீவிரமாக்கக்கூடாது. ஐரோப்பியர்கள் சில விரிவாக்கங்களுக்கு அடிபணியக் கூடாது. எமது புவியியல் மற்றும் நமது வரலாற்றை மறந்துவிடக்கூடாது. நாங்கள் ரஷ்ய மக்களுடன் போரில் ஈடுபடவில்லை. ஐரோப்பா இனிமேலும் மொஸ்கோவுக்கும் வொஷிங்டனுக்கும் இடையிலான பனிப்போர்க் காலச் சூழ்நிலைக்குள் இருக்கப் போவதில்லை' - என்றார். (ம)

# தாமதமற்ற அமைதியை எதிர்பார்க்கிறோம் நாம்!

## துருக்கிப் பேச்சை முன்னிட்டு ஷெலன்ஸ்கி வலியுறுத்து



கீவ், மார்ச் 30

உக்ரைனில் தாமதமின்றிய அமைதியை நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த ஆக்கிரமிப்பு உண்மையில் மோசமானது என்று தெரிவித்தார் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை ஒரு மாதத்தைக் கடந்துள்ளது. மரியுபோல் நகரம் தாக்குதல்களால் சல்லடையாகியுள்ளது. ஏனைய நகரங்களிலும் தாக்குதலை ரஷ்யப் படைகள் தீவிரப்படுத்தியுள்ளன. இந்த நிலையில் ரஷ்யாவுக்கும் உக்ரைன் அதிகாரிகளுக்கும் இடையிலான அமைதிப்பேச்சு துருக்கியில் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் ஷெலன்ஸ்கி.

இந்த வாரம் துருக்கியில் நடைபெறும் உக்ரைனிய - ரஷ்ய பேச்சுக்களில் உக்ரைனின் முன்னுரிமைகள் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகும். உண்மையில் தாமதமின்றி நாங்கள் அமைதியை எதிர்பார்க்கிறோம். துருக்கியில் நேருக்கு நேர் சந்திப்பதற்கான வாய்ப்பும் தேவையும் உள்ளது. இது மோசமானதல்ல, முடிவைப் பார்ப்போம். ரஷ்யா முற்றுகையிட்ட மரியுபோல் நகரின் மோசமான நிலைமையை நினைவூட்ட மற்ற நாடுகளின் நாடாளுமன்றங்களில் நான் தொடர்ந்து முறையிடுவேன் - என்றார். (ம)



### ரஷ்யாவில் ஆட்சிமாற்றம்

# புடின் தொடர்பான கருத்துகளுக்கு மன்னிப்புக் கேட்கப்போவதில்லை

வொஷிங்டன், மார்ச் 30

ரஷ்யாவில் புடின் ஆட்சியில் நீடிக்கக்கூடாது என்ற தனது கருத்துக்காக ஒருபோதும் மன்னிப்புக் கேட்கப்போவதில்லை என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபரான பைடன்.

உக்ரைனில் ரஷ்யாவுக்கு வெற்றி கிடைக்காது. இந்த போரில் சில நாள்களிலோ, சில மாதங்களிலோ வெற்றிபெற முடியாது. நீண்ட காலத்துக்குத் தொடரக்கூடும். ரஷ்ய அதிபர் புடினுக்கு எதிராக பெரும் பொருளாதார நாடுகள் ஒன்றுபட வேண்டும். இந்த மனிதர் (புடின்) ஆட்சியில் நீடிக்கக் கூடாது. அவர் அதிகாரத்தில் இருக்கக் கூடாது. புடின் ஒரு கசாப்புக் கடைக்காரர். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஊடுருவலை சுதந்திர உலகம் எதிர்க்கிறது - என்றார். பைடனின் இந்தக் கருத்துக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்தது. அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் ரஷ்யா வலியுறுத்தியது. (ம)

# பதவியிலிருந்து அகற்ற வெளிநாட்டுச் சதி

## இம்ரான்கான் கவலை



இஸ்லாமாபாத், மார்ச் 30

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், தன்னைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு வெளிநாட்டுச் சதி நடப்பதாக குற்றஞ்சாட்டி உள்ளார்.

பாகிஸ்தானில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கத்துக்குப் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசே காரணம் எனக்கூறி அவரது அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முனைப்புக் காட்டி வருகின்றன. இம்ரான்கானின் சொந்தக் கட்சி உறுப்பினர்கள் சிலரே நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கக்கூடும் என்பதால் இம்ரான்கான் ஆட்சியில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்நோக்கியுள்ள பிரதமர் இம்ரான்கானுக்கு ஆதரவாகத் தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆதரவாளர்கள் பேரணியில் உரையாற்றிய பிரதமர் இம்ரான்கான், பிரதமர் பதவியில் இருந்து தன்னை அகற்றுவதற்கு வெளிநாட்டுச் சதி நடக்கின்றது. இதற்காக வெளிநாடுகளில் இருந்து பாகிஸ்தானுக்குப் பணம் அனுப்பப்படுகிறது எனப் பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத் திறனாளிகளின் உற்பத்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 30

மாற்றுத் திறனாளிகளின் சிறுகைத் தொழில் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி இன்றும், நாளையும் யாழ். புதிய தனியார் பஸ் நிலையத்தின் முன்பாக நடைபெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் அமைப்புக்களின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் சிறுகைத் தொழில் உற்பத்திப் பொருள்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ம-4-20)

## மரியசேவியரின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் 'கலைத்தூது' அருட்கலாநிதி அமரர் நீ.மரியசேவியர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாளைமறுதினம் இடம்பெறவுள்ளன. யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் முற்பகல் 11 மணிக்கு நினைவுத் திருப்பலி ஆரம்பமாகி, தொடர்ச்சியாக மாலை 4 மணிக்கு யாழ். கலைத்தூது கலாமுற்றத்தில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் மரியசேவியர் அடிகளாரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயம், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறக்கப்படவுள்ளது. அத்துடன் இசை அஞ்சலி, நினைவஞ்சலி உரைகள் என்பவற்றுடன் மரிய சேவியர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவாக தொகுக்கப்பட்ட 'மரியசேவியம்' என்ற நூல்வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ம-14)

## பட்டப்பகலில் வீட்டில் திருட்டு

வீட்டில் யாரும் இல்லாத தருணத்தில், பட்டபகலில் வீடு புகுந்து 5 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் அராலி வடக்கு செட்டியார் மடப்பகுதியில் இடம்பெற்றது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-4,125)


வெளிநாடுகளில் நீங்கள் உழைக்கும் பணத்துக்கு இந்நாட்டில்
25 மில்லின் ரூபாய்* வரையிலான கடன் வசதிகள்!



மக்கள் வங்கியின் "எத்தர இசுர" தனிநபர் வெளிநாட்டுப் பணத்துக்கான கணக்கொன்றுக்கு (PFCA) அல்லது "எத்தர வாசனா" ரூபாய் கணக்கொன்றுக்கு பணம் அனுப்பும் உங்களுக்கு இப்போது சுவிஷேச கடன் வசதிகள்.

- 25 மில்லின் ரூபாய்* வரையிலான கடன் வசதிகள்
- 10 வருடங்கள் வரையான கடன் மீள்செலுத்துகைக் காலம்
- வெளிநாடுகளிலிருந்தே கணக்கை ஆரம்பிக்கலாம்
- எத்தர வாசனா ரூபாய் கணக்குகளுக்கு ஆரம்ப வைப்புத் தொகை மக்கள் வங்கியிடமிருந்து
- இணையதள வங்கிச் சேவைகளினூடாக கணக்குகளை கையாளலாம்.

PEOPLE'S BANK எத்தர வாசனா RUPEE SAVINGS ACCOUNT

ETHERA ISURA

கணக்கை ஆரம்பிக்க மேலதிக விபரங்களுக்கு:
+94 701 750 294 +94 112 332 745
newnrfc@peoplesbank.lk

கடன்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு:
+94 761 452 320 retailloans@peoplesbank.lk
*உங்கள் வருமானத்தின் அடிப்படையில் ஒரு பாரிய கடன் வழங்கப்படலாம்.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation


# இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்!

## மறுவாழ்வு முகாம் மக்கள் கோரிக்கை

தமிழ்நாட்டுக்கு வரும் ஈழத்தமிழர்களுக்கு அரசு விரைவில் விடிவுகாலம் ஏற்படுத்தித் தரும் என்று தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டதைப் போன்று, ஒன்றிய அரசின் மூலமாக இலங்கையில் இருக்கும் தமிழர்களின் வாழ்விலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழகம் வாழ் மறுவாழ்வு முகாம் மக்கள் தமிழ்நாடு முதல்வருக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

ஈழத்தமிழர்களின் நீண்டகாலக் கனவை மெய்ப்பிக்கும் விதமாகவும், நாடோடிகளாக அலைக்கழிப்புக்கு உள்ளாவதை மேலும் அனுமதிக்காத வகையிலும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனாத் தொற்றுக்குப் பின்னர், உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக, தற்போது இலங்கையில் நிகழும் பொருளாதார நெருக்கடிகளும் அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் சந்தித்துவரும் இன்னல்களும் மாபெரும் பேரவலம் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

1970ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த பஞ்சத்தைவிட இது மிகப்பெரும் அவலம். இதனால் அத்தியாவசியப் பொருள்களின் விலை பல மடங்கு இலங்கையில் அதிகரித்துள்ளது. இதனால் பொருள்களை வாங்க இயலாமல் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி தமிழர்கள் கடல் வழியாக தமிழகத்துக்கு வரத் தொடங்கியுள்ளனர். போர்ச்சூழலையும் தாண்டி, பட்டினிச் சாவுக்கு அஞ்சி தங்கள் குடும்பங்களோடு வரும் அனைத்து தமிழர்களையும் தமிழக கடலோர காவற்படை கைது செய்து நடவடிக்கை எடுக்காமல், மனிதாபிமானத்தோடு அவர்களுக்கு உதவிகளைச் செய்துவருவது எம்மை நெகிழ்ச்சி அடைய வைக்கின்றது. இதற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் -என்றுள்ளது. (ம-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள்

உதயன்



சாவகச்சேரி சண்முகானந்தா வித்தியாலய மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. அதிபர் ச.துளசிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி அதிகாரி இ.ஞானராஜ் கலந்துகொண்டார் (ச-9)



கிளிநொச்சி அருள்மிகு கிருஷ்ண ஆலயத் சித்திரத் தேர் வெள்ளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது. (எ-இ)



போரால் பொருளாதாரம் நலிவடைந்த இரு மாணவிகளின் கற்றல் செயற்பாட்டுக்காக ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது. கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள்பீடம் சைவசித்தாந்தத்துறையின் விரிவுரையாளரான தி.செல்வமனோகரனால் இந்த ஈருருளி அன்பளிப்பு செய்யப்பட்டது. (ச-159)



கொடிகாமம் அரசினர் வித்தியாலய மாணவர்களுக்கு ஜேர்மனியில் வசிக்கும் நபரொருவரின் நிதியனுசரணையில் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரும் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத்தொண்டர் சபையின் தேசிய கண்காணிப்பாளருமான வை.ஜெகதாஸ் இதனை மாணவர்களுக்கு வழங்கினார். (ச-159)





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே இளம் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' கனடாவில் வசித்துவரும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்களின் அனுசரணையுடன் இடம்பெற்று வருகின்றது. 'காரைக்கால் அம்மையார் குருபூஜை' நிகழ்வு இணுவில் காரைக்கால் சிவன் மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் ஒரு பகுதியாக இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம)





யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதடி, நவபுரம் எருதிடல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசலைக்கு நேரில் விஜயம் செய்து பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்தும் மலசலகூடத்தைத் திருத்துவதற்கு இரண்டு இலட்சம் ரூபாவை வழங்குவதாக அவர் தெரிவித்தார். (ய-159)



கரித்தாஸ்- கியூடெக் வன்னி நிறுவனத்தால் உருத்திரபுரம் புனித பற்றிமா பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு அதிபர் அருட்சகோதரி வசந்தமலர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நாட்டில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் ஒருபகுதியாக இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-159)



கிளிநொச்சி. சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் 2022ஆம் ஆண்டு வருடாந்த செயற்பாட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் [illegible] தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்றது. (ம-159)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 04 . 1951



மறைவு 29 . 03 . 2022

## கந்தையா பரமேஸ்வரி

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கு ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தின் குலவிளக்கு கந்தையா பரமேஸ்வரி நேற்று (29.03.2022) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் அமரர் உதயகுமார், சிதம்பரப்பிள்ளை, சறோஜினிதேவி, யோகராஜா, மங்களேஸ்வரி, செல்வரத்தினம், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவரூபன் (சுவிஸ்), சிவரவி (லண்டன்), சிவரஜி (சுவிஸ்), சிவரமேஸ் (பிரான்ஸ்), சிவரதீஸ் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோபனா, ராஜி, குணசீலி, மஞ்சு, தாட்சாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன், லக்சிகா, யதுராம், மதுசிகா, அபிசன், அரோசன், அசாந், லசாந்தன், கபிஸ், லக்சிகா, அபிசன், ஆகித்யா, அகர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 227 6061

(CR 8184) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1949



மறைவு 25 . 03 . 2022

## அமரர் வல்லிபுரம் சதாசிவம் செல்வராசா

**(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர், கமநலசேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)**

திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வ.ச.செல்வராசா அவர்கள் 25.03.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா நல்லம்மாவின் மருமகனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், தயாளன் (இலண்டன்), சங்கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி பதிவாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), தீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பதியந்தலாவ, அம்பாறை), சஞ்சிதா (இலண்டன்), அஜந்தன் (ஸ்ரீ அம்பாள் பெயின்ட், மந்திகை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), சுதன் (இலண்டன்), ஐஸ்வரியா (இலண்டன்), நிரோஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் மாமனாரும் அபிவர்ஷன், பானுஜன் (அமரர்) அஸ்விகா, ஆருஸ், அபிஸ்னன், கர்ஷிகா, ஜதீஸ், அனோஜ், திகாசன், கபிஸ்னா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 31.03.2022 (வியாழக்கிழமை) காலை 8.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருநாவலூர், புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(CR 8183) (3/6)

தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி விக்கினேஸ்வரன் பஞ்சவர்ணம்



அண்ணமார் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரன் பஞ்சவர்ணம் அவர்கள் நேற்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை இறைபடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், திரு.ஐ.விக்கினேஸ்வரன் (செட்டி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், குணரத்தினம் (அமரர்), புனிதவதி, கனகலிங்கம் (அமரர்), முத்துலிங்கம், தர்மலிங்கம் (அமரர்), பராசக்தி, சுந்தரலிங்கம் (அமரர்) ஆகியோரின் அன்பு நிறைந்த சகோதரியும், பரமேஸ்வரி (அமரர்), சரஸ்வதி, மகேஸ்வரன், யோகேஸ்வரி (அமரர்), சிவகுமார் ஆகியோரின் மைத்துனியும், ஐங்கரன், வினோதினி, திருக்குமரன், கோகுலராம், மகாசேனன் (உதவி விரிவுரையாளர் - யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்) ஆகியோரின் நேசமிகு தாயாரும், தர்மினி, சசீந்திரராஜன், பிரகாஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஷ்ணுஜன், அஷ்வினி, ஜஸ்மினி, றோஸ்மினி, விதுர்ஜன், கருணிகா, தருணிகா, திருக்ஷிகா, விகஷன் ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அண்ணமார் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 3583 714
077 1307 982

(CS 19125)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



திருகோணமலை உயர்நீதி மன்றத்தில் சுருக்கெழுத்தாளராக பணிபுரிந்த

## அமரர் தேவசிகாமணி சறோஜினிதேவி

**30.03.2022**

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டு சென்றதேனோ?
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள் .....

இன்று (30.03.2022) புதன்கிழமை நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

077 913 8996

குடும்பத்தினர்

(CS 43836) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 03 . 1945



மறைவு 10 . 04 . 2021

## வீரசிங்கம் பரமேஸ்வரி

அன்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் சிகரமாகவும்
வாழ்ந்த எம் அன்புத் தாயே!

விழி மூடி எம்மை வழிகாட்டும் எங்கள்
ஒளியான தாயே! ஓடிவருவீரோ!
வாழ்வை வென்று விட்டேன் என்று
வானகமாய் நீ சென்று விட்டாய்
ஏங்கித் தவித்து இன்று
நித்தமும் நினைவில் கொண்டு
நிஜத்தில் இறைவனிடம் கலந்திட்ட உங்கள்
ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

நாவலடி லேன்,
கொக்குவில் மேற்கு.

(cs 43859) (2.6)

குடும்பத்தினர்

# வலி.கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து)
## அச்சுவேலிகிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் - 03.04.2022

எமது சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 03.04.2022ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளைப் பொதுச்சபை கூட்டத்திற்கு சமூகமளிக்க தகைமையுள்ள அனைத்து அங்கத்தவர்களளுக்கும் உரிய கிளைகளுக்கான தவிசாளர்களினால் தனித் தனி அழைப்பு கடிதம் தபால் மூலம் (வாக்காளர் பட்டியலில் உள்ள முகவரியின் படி) அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும் உரிய அழைப்பு கிடைக்கப்பெறாது விடினும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு கலந்துகொள்ள தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

| இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அச்சுநகர் | அச்சுநகர் கிளை 01.இன் கட்டடம் | திரு.சி.சிறிதரன் |
| 02 | 02 | பத்தமேனி | பத்தமேனி கிளை 02 இன் கட்டடம் | திரு.க.பரநிருபன் |
| 03 | 03 | தம்பாலை | தம்பளை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் | திரு.ச.பாலகுமார் |
| 04 | 04 | இடைக்காடு | மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் | திரு.சி.குணாளன் |
| 05 | 05 | வளலாய் கிழக்கு | வளலாய் கிழக்கு கிளை 05 இன் கட்டடம் | திரு.ச.சசீந்திரன் |
| 06 | 06 | வளலாய் மேற்கு | வளலாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையம் | திரு.சி.சியாந்தன் |
| 07 | 07 | புஸ்பவதி | அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலையம் | திரு.அ.தயாளன் |
| 08 | 08 | அச்சுவேலி தெற்கு | அச்சுவேலி தெற்கு கிளை 08 இன் கட்டடம் | செல்வி சி.மாலினி |
| 09 | 09 | தோப்பு | தோப்பு கிராம அபிவிருத்தி சங்கம் | திரு.வீ. இரத்தினகாந்தன் |
| 10 | 10 | ஆவரங்கால் தெற்கு | ஆவரங்கால் தெற்கு கிளை 10 இன் கட்டடம் (மேல்மாடி) | திருமதி சு.ரூத்ஷாலினி |
| 11 | 11 | ஆவரங்கால் கிழக்கு | ஆவரங்கால் கிழக்கு கலையக சனசமூக நிலையம் | திருமதி செ. இந்திரவதனா |
| 12 | 12 | நவற்கிரி | நவற்கிரி கிளை 12 இன் கட்டடம் | திரு.இ.உதயகுமார் |
| 13 | 13 | புத்தூர் மேற்கு | புத்தூர் மேற்கு கிளை 13 இன் கட்டடம் | திருமதி ச.பிருந்தாமலர் |
| 14 | 14 | சிறுப்பிட்டி | சிறுப்பிட்டி கிளை 14 இன் கட்டடம் | திரு.சி.பிரதீபன் |
| 15 | 15 | சூரியோதயம் | சூரியோதயம் கிளை 15 இன் கட்டடம் | திர நா.குமணதாசன் |
| 16 | 16 | நாவற்காடு | நாவற்காடு கிளை 16 இன் கட்டடம் | திரு.ச.ரதிகுலன் |
| 17 | 17 | வாதரவத்தை | வாதரவத்தை கிளை 17 இன் கட்டடம் | திரு.க. திஸாகரன் |
| 18 | 18 | கதிரிப்பாய் | கதிரிப்பாய் ஸ்ரீசுப்பிரமணியம் சனசமூக நிலையம் | திரு.இ.கஜேந்திரன் |
| 19 | 19 | அச்சுவேலி வடக்கு | அச்சுவேலி வடக்கு இலடி கிளை 19 இன் கட்டடம் | திருமதி சு.கஸ்தூரி |
| 20 | 20 | விக்கினேஸ்வரா | அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் | திரு.ஜ.மயூரன் |
| 21 | 21 | ஆவரங்கால் வடக்கு | ஆவரங்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் (முத்தி முன் பள்ளி) | திரு.அ.விமல்ராஜ் |
| 22 | 22 | புத்தூர் கிழக்கு | புத்தூர் கிழக்கு. குமரகுரு பரன் சனசமூக நிலையம் | திரு.வே.பிரதீஸ்குமரன் |
| 23 | 23 | கருகப்பை ஈஸ்வரன் | தமிழாயம் (மகாத்மாஜி) சனசமூக நிலையம் | திரு.சோ.தங்கேஸ்வரன் |
| 24 | 24 | ஜனசக்தி | ஜனசக்தி பொதுநோக்கு மண்டபம் | திரு.கு.நிசாந்தன் |
| 25 | 25 | கலைமதி | கலைமதி மக்கள் மண்டபம் புத்தூர் | திரு.அ.வசிகரன் |
| 26 | 26 | வளர்மதி | புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் | திரு.த.கண்ணதாஸன் |

செயலாளர்
வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம். (வ - து) அச்சுவேலி.
30.03.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 18 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தேவஸ்தான தர்ம கர்த்தா சபை அறிவித்துள்ளது. (14)

## விளையாட்டு விழா

சாவகச்சேரி, மார்ச் 30

மட்டுவில்தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பாலர் விளையாட்டு விழா வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இன்று புதன் கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் க.திவாகர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ய)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வட்டுக்கோட்டை துரட்டிப்பணை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மது சூதனக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்
### யா/ சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம் அளவெட்டி.



அதிபர்
திரு.தி.பிரதீபன்



வகுப்பாசிரியர்
திருமதி
ஜெ.தில்லைநாதன்



ம.லாவண்யன்
177 புள்ளிகள்



வ.தன்சிகா
175 புள்ளிகள்



பி.ஆருத்ரா
172 புள்ளிகள்



கி.தர்சாந்
167 புள்ளிகள்



நா. ஹாருண்யன்
163 புள்ளிகள்



வி.கிசோர்
150 புள்ளிகள்



சி.தரண்யா

எமது பாடசாலையில் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 19 மாணவர்களில் 7 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றதோடு 6 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலும் 4 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இம் மாணவர்களையும் இவர்களை வழிப் படுத்திய அதிபர் திரு.தி.பிரதீபன் மற்றும் வகுப்பாசிரியர் திருமதி ஜெ.தில்லைநாதன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலைச் சமூகம்.



விளம்பர அனுசரணை : Rajeevan Motors, Chunnakam.
Krishna Motors, Jaffna.

Congratulations

## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்
## 1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப் பப்படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் **2022.04.12** ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
3. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2022/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

**விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்**

| இல | வலயக் கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் | 1C |
| 02 | | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 1AB |
| 03 | மன்னார் | மன்/பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை | 1C |
| 04 | | மன்/அல் ஜாசிம் மகா வித்தியாலயம் | 1C |
| 05 | வடமராட்சி | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | 1AB |
| 06 | | யா/புற்றளை மகா வித்தியாலயம் | 1C |
| 07 | | யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம் | 1C |
| 08 | வவுனியா வடக்கு | வ/ஓமந்தை மத்திய கல்லூரி | 1AB |
| 09 | யாழ்ப்பாணம் | யா/இடைக்காடு மகா வித்தியாலயம் | 1AB |

**இ.வரதீஸ்வரன்**
**செயலாளர்**

**2022.03.30** (CR 37745) (3/6)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-01 கடற்கரை வீதி 235 ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் ஏ.துரையப்பா என்பவரின் பெயரில் காணப்படுகின்றது.

இதன் கீழ் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 2005.04.06 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.அ.இ.ஏகநாதன் முகதாவில் 1338ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கமும், ஸ்ரீதேவசேனாவும் குறித்த ஆதனத்தை விஸ்வலிங்கம் மோகனமூர்த்திக்கு அறுதியாகவிற்றுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கச்சேரியடி கண்டி வீதி 92ம் இலக்கத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் மோகனமூர்த்தியும் பெண் விஜிதாவும் சேர்ந்து பிரசித்திபெற்ற நொத்ததரிசு சே.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2968ம் இலக்க 31.05.2005ம்திகதியிடப்பட்ட அறுதி மூலம் சின்னவன் ஸ்ரீபன் சுந்தரராஜ°ம் பெண் அருள் வதனாவுக்கும் அறுதி உறுதி மூலம் நிறைவேற்றியுள்ளார்கள்

பின்னர் 252 யாழ் வீதி மானிப்பாய் சின்னவன் ஸ்ரீபன் சுந்தரராஜனும் பெண் அருள் வதனாவும் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 7728ம் இலக்க 05.05.2007ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் மானிப்பாய் பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்காவும் அறுதி உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை :** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ் நகர் 2ம் பிரிவில் அமைந்துள்ள "அன்னமாளிகை" நிலப்பரப்பு 2 குளி 07, ஆனால் அது 30.01.2005ல் நில அளவையாளர் பி.தவராசாவால் அளந்து வரைந்த நில அளவைப்பட 27.02ம் இலக்கத்தின்படி நிலபரப்பு 2 குளி 0.32 ஆகும்.

**எல்லை**

கிழக்கு - கிரான்ட் கொட்டல் ஆதனம்.
வடக்கு - மீதி ஆதனம்,
மேற்கு - மழவராஜர் நம்பிக்கை சொத்தின் ஆதனம்
தெற்கு - கடற்கரை வீதி

தற்போது பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்கம்மா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரான்சிஸ் அரியநேசன் பெண் மேரிமொனிக்கம்மா என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்.**

(CR 37723) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியரான
திருமதி வாணி குணசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மனோன்மணியம்மா சிவசம்பு

அவர்கள் கடந்த 28.02.2022 இறை பதம் அடைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 37727) (3/6)

மண்ணில் 06.12.1926 விண்ணில் 28.02.2022

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி



# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 02 . 1951



மறைவு 29 . 03 . 2007

## அமரர் எஸ்.ஜே. செல்லத்துரை

முன்னாள் கிராம சேவை அலுவலர், அதி விசேட தரம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

ஓடும் காலங்களில் மாறும் பாதைகளே!
மாறா வலியை ஏனோ சுமக்க வைத்தாய்
அறியாத சுகங்களையும் மறையாத
ஏக்கத்தையும் ஏனோ தந்து சென்றாய்
துடிப்பு இல்லாத படகைப்போல ஏனோ
எங்களை தவிக்கச் செய்தாய்
முடிவு இல்லா வானம் போல
உம் நினைவுகள் எம்முள் என்றும் வாழுமே!

45, றக்கா லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (CS) (3/6)

குடும்பத்தினர்



# ஒன்பதாவது ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை



## Lion மார்கண்டு-கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதவான்
முன்னாள் விமாகி - உரிமையாளர்

### திதி : 30-03-2022

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்.
ஒன்பது ஆண்டுகள் ஓடோடி மறைந்திடினும்
ஓயாது உங்கள் இனிய பசுமையான நினைவலைகள்.
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறதே.
சுர விழிகள் நிறைகிறது. கண்ணீர் சொரிகிறது.
உயிருக்குள் உறைந்து எம் உயிரோடும் உணர்வோடும் கலந்து
எம்முள்ளே நீங்கள் என்நாளும் உயிர் வாழ்கிறீர்கள்

இனிய நினைவுகளும் இழந்த வலியும் வேதனையும்
இதயம் துடிக்கும் வரை இறுதி மூச்சு வரை எம்முள் சுமப்போம்.

உயிரோட்டமான நீங்கா நினைவலைகளுடன்
அன்பு மனைவி: ரோகினி கிரிதரன்
அருமை மகள்: கிரிதரன் அம்ரிஷா


## ஒருங்கிணைப்புக்...

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இணைப்பாளர் கீதநாத் காசிலிங்கம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றைய திகதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடி அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மேற்கொள்வதற்கும், பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் ஏதுவாக, யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை பிரதேச செயலக ரீதியாக மிக விரைவில் நடந்த ஆவண செய்ய வேண்டும் என்றும், பிரதேச செயலக ரீதியாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான திகதிகளை அறியத் தர வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரின் வரம்பு மீறிய தலையீடுகள் காணப்படுகின்றன என்று பல தரப்புகள் குற்றஞ்சாட்டி வந்த நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான இணைப்பாளராக அண்மையில் கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார். (எ-இ)


### 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk (cr.37738)(2.6)


## தமிழக...

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர் என்றும் விசைப்படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மீனவர்கள், தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை மயிலிட்டி துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, அவர்களை கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை, வல்வெட்டித்துறையில் இருந்து பயணித்த மீனவப் படகு ஒன்று, தமிழகத்தின் காரைக்கால் கடற்பகுதிக்குள் நுழைந்ததால் தமிழக கடலோரக் காவல்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

(அ-எ-23-27)


### Experienced Accounts Assistant

இடம்: யாழ். நகரில் உள்ள பிரபல ஹொட்டல்
✓ குறைந்தது 2 வருட முன் அனுபவம். ✓ 30 வயதுக்கு உட்பட்டவர்.
✓ ICASC / AAT / CIMA / ACCA பயிலுனர்.
✓ ICASC பயிற்சிக்கு அனுமதி உண்டு.

தொடர்பு:-070 770 4527



### வாடகைக்கு உண்டு

அரியாலை சித்திவிநாயகர் கோவிலுக்கு முன் இருக்கும் ஒழுங்கையில் புதிதாக கட்டப்பட்ட வீட்டின் மாடிப்பகுதி வாடகைக்குண்டு. அலுவலகம், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.3 அறைகள், Bathroom, 2 பல்கனி சகல வசதிகளுடன் கூடியது.

(cs 43854) (2.6) 074 216 8717



### கார் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் Maruthi a Star, காரும் Merc Benz காரும் விற்பனைக்கு உண்டு.

076 981 0777

(ACO 19198) (3/6)



# நினைவஞ்சலி

இரண்டாவது | முதலாவது

பிறப்பு 14.12.1951



இறப்பு 19.01.2020

## முத்தையா இராசநாயகம்

நாளது கடந்து ஆண்டுகள்
இரண்டு ஆனதோ அப்பா? .......
அனைத்துப் பொறுப்புகளும்
தலையில் சுமந்து அரவணைக்கும்
உள்ளம் நீங்கள். இன்று
ஒளி இழந்து வாடுகின்றோம்
அப்பா .........

பிறப்பு. 02.03.1985



இறப்பு. 30.03.2021

## இராசநாயகம். காஞ்சன்

உனை இழந்தது
இன்னுமே நம்ப முடியவில்லை
எம்மைவிட்டு நீ சென்ற செய்தி
நீ கடைசியில் உரையாடியது
இன்று வரை ஒலிக்கிறதடா
போவாயென்று எண்ணவில்லை
அப்பாவுடன் சென்றதேனோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மீசாலை கிழக்கு,
மீசாலை. (CR 37736) (3/6)

உங்களை நினைந்து வாழும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்...

அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, கைதிகள் விடுதலை உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முதல்கட்டமாகப் பேசியுள்ளேன். இந்தப் பேச்சுக்குப் பல தரப்பிலிருந்தும் வரவேற்புக் கிடைத்துள்ளது. பேச்சுக்கள் தொடரும்.

தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் நான் தீர்வுகளைக் காண்பேன். இது எனது கடமை. புலம்பெயர் தமிழர்களுடனும் நான் பேசத் தயாராகவுள்ளேன். நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை தற்போது கடும் பொருளாதா நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் இந்தியா பிற நாடுகளின் உதவிகளை இலங்கை எதிர்பார்த்துள்ளது. முக்கியமாக இந்தியாவின் உதவிகளை இலங்கை எதிர்பார்த்துள்ள நிலையில், தமிழ் மக்களுக்கான தீர்வு மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. (அ-எ-22)

## திடீர்...

நிதர்சினி (வயது-27) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இவர் ஹெப்பிற்றிக்கொலாவில் குடும்ப நல உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார் என்றும் சுகவீனம் காரணமாக சில நாள்களுக்கு முன்னர் வீட்டுக்குத் திரும்பியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

சுகவீனத்தை அடுத்து, கடந்த 26ஆம் திகதி இவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், 27ஆம் திகதி மயக்க நிலைமைக்குச் சென்றுள்ளார். அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மேலதிக பரிசோதனைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## வீடு உடைத்து...

நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டை பட்டப் பகலில் உடைத்து, 7 பவுண் நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். திருடப்பட்ட நகைகள் சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26-27)

## சிறுமிகள்...

கடந்த 16ஆம் திகதி அம்பலவன்பொக்கணைக்கு மாலை நேர வகுப்புக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற 14 மற்றும் 15 வயதுச் சிறுமிகள் இருவர் வீடு திரும்பவில்லை. மாலை நேர வகுப்புக்கும் அவர்கள் செல்லவில்லை. பெற்றோர் இது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இரு நாள்கள் கழித்து இரு சிறுமிகளும் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், சிறுமிகளில் ஒருவருடன் பேஸ்புக் ஊடாகப் பழக்கம் ஏற்படுத்திக் கொண்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரைச் சந்திப்பதற்காக சிறுமிகள் இருவரும் பஸ்ஸில் மட்டக்களப்பு செங்கலடிக்குச் சென்றமையும், சிறுமிகள் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் வெவ்வேறு நபர்களால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையும் விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மட்டக்களப்பைச் சேர்ந்த 17 வயதான இரு சிறுவர்களைக் கைது செய்துள்ளனர். சிறுமிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் பயன்படுத்த வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் வந்த சிறுமிகளை வீடொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நகர் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரும், அவரது இரு நண்பர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 30 முதல் 35 வயதானவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, சிறுமிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பிறிதொரு சந்தர்ப்பத்தில் சிறுமிகளில் ஒருவரைத் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், சிறுமியின் காதலன் என்று கூறப்படும் 17 வயதுச் சிறுவன் ஒருவரும், சிறுமியின் உறவினர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (அ-எ-10)

## மின்வெட்டு...

A முதல் L வரையான வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு நாளை காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் 6 மணித்தியாலங்களும், மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியில் 4 மணித்தியாலமும் மின்துண்டிக்கப்படவுள்ளது.

P முதல் W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரையான காலப் பகுதியில் 6 மணித்தியாலங்களும், மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியினுள் 4 மணித்தியாலங்களும் மின்துண்டிக்கப்படவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 2ஆம் திகதி வரை நாளாந்தம் அதிகளவு நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும், எரிபொருள் இறக்குமதிக்கான டொலர் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்றும் தெரியவருகின்றது. (எ-இ)

## மே மாதத்தில்...

ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை இரண்டரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் கலைக்க முடியும். எனினும், நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாளை வேண்டுமானாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்று சட்டத்தரணியான உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்வைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகியனவும் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்கவில்லை. முழு நாடும் சரியான பாதைக்கு எனும் வேலைத்திட்டத்தை நாமே முன்வைத்துள்ளோம். சரி, எதிரணிகளை விடுவோம், தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டியது அரசின் கடப்பாடாகும். அதைச் செய்யாவிட்டால் அரசு பெயில் என்றே புலப்படும்.

நாட்டு மக்களை சாகடிக்கும் இந்த அரசுக்கு ஆட்சியை தொடர்ந்து முன்னெடுக்க அனுமதி வழங்குவதா? அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு சென்று நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கக்கூடிய தரப்புக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குவதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கே இருக்கின்றது. அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

இந்த அரசு வசம் தற்போது 124 ஆசனங்களே தற்போது உள்ளன. அதில் 12 பேர் எமக்கு ஆதரவு வழங்கினால் அரசின் சாதாரண பெரும்பான்மை இல்லாமல் போகும். சிலவேளை வரப்பிரசாதங்களுக்காக எமது அணியில் உள்ள சிலர் முடிவை மாற்றலாம். ஏனெனில் அரசியலில் எதுவும் நடக்கலாம். எனவே 12 என்ற இந்த இலக்கை அடைய நாம் 36 பேரை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அதற்குச் சிறிது காலம் வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை மே மாதம் வரும்போது உக்கிரமடையும். அப்போது மக்களே நாடாளுமன்றத்தை கலைக்குமாறு கோருவார்கள். அப்போது நாடாளுமன்றத்தை கலைக்கும் யோசனையை முன்வைக்க எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்பின் பிரகாரம் இரண்டரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். ஆனால், நாடாளுமன்றம் நினைத்தால், நாளை வேண்டுமானாலும் தன்னைக் கலைத்துக்கொள்ள முடியும். இந்த யோசனையை நிறைவேற்றிக்கொள்வதற்கு சாதாரண பெரும்பான்மையே போதும். அதாவது 113 கூடத் தேவையில்லை.

வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவு இருந்தால் போதும். அதாவது 20 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்று 11 பேர் ஆதரித்தால் அந்த இலக்கை அடையலாம்.

அதேவேளை, இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதை தடை செய்வதற்கான அரசமைப்பு திருத்தத்தை நான் அடுத்த மாதம் முன்வைப்பேன். தனிநபர் சட்டவரைவாக இது முன்வைக்கப்படும். இரட்டை குடியுரிமை உடையவர்கள் நீதிபதிகள், தூதுவர்கள் மற்றும் அரச நிர்வாக சேவையில் உயர் பதவிகளை வகிப்பதற்கு தடை செய்யுமாறு இதன்மூலம் கோரப்படும் - என்றார். (அ-எ-44)

## சந்தேகநபரை...

என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் 5 பேரைக் கைது செய்துள்ளனர்.

திருட்டுத் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த ஒருவரைக் கைது செய்ய கோப்பாய் - யோகபுரம் பகுதிக்குச் சென்றபோதே பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

சந்தேகநபரை அழைத்துச் செல்ல பொலிஸார் முயன்றபோது அங்கிருந்தவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டதுடன், பொலிஸாருடன் தள்ளுமுள்ளில் ஈடுபட்டுள்ளனர். அதையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகநபரைக் கைது செய்யாது அந்த இடத்தில் இருந்து அகன்றுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி என்பதால், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 5 பேர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுமாலை கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26-10)

## நவக்கிரியில்...

என்று கூறப்படும் இளைஞர், நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளார்.

நவக்கிரி சனசமூக நிலையத்துக்கு அருகில் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் அந்த இளைஞர் மீட்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. மீட்கப்பட்ட இளைஞர் மருத்துவ பரிசோதனைக்காக அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அருந்தவராசா சயந்தன் (வயது-30) என்ற இளைஞரே கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வீட்டின் முன்னுள்ள தோட்டவெளியில் மூவர் அவரைத் துரத்திச் சென்றனர் என்றும், அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அவரது உறவினர்கள் இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேவேளை, கடந்த 12ஆம் திகதி இந்த இளைஞரின் வீட்டுக்கு வந்த இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் இளைஞரின் தந்தை காயமடைந்த நிலையில், தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இளைஞன் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இளைஞரின் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னரே முழுமையான தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## உண்டியல்...

யல் உடைத்துத் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்துடன், வெளிநாட்டு நாணயக் குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமரா பதிவுகளைக் கொண்டே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடடிக்கைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களின் வருடாந்தப் பொங்கல் விழா



யாழ். பல்கலைக்கழகத்தின் வலிகாம வலய கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரின் வருடாந்தப் பொங்கல் விழா, கீரிமலை நகுலேஸ்வரம் குழந்தைவேல் சுவாமிகள் தியான மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கலாசார முறைப்படி பொங்கல் இடம்பெற்றது. அதனுடன் இணைந்து பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன. தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் தியான மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. கலாசார விளையாட்டுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வலிகாம வலய மாணவர்களால் மாவை - கலட்டி அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் வழங்கப்பட்டன. (ம-4,125)


## வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்கு உண்டு

074 237 7090

(CS 19117) (2/6)

## வேலையாள்கள் தேவை

ஆறுகால் மடத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு **தையல், பொதிசெய்தல்** வேலைகளுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

(cs 19115) (2.6) **077 335 7857**

## தொழில் வாய்ப்பு

தனியார் நிறுவனத்தில் பதவி வெற்றிடங்கள்
தகைமை : A/L கல்வி கற்றிருத்தல் (ஆண்/ பெண் இருபாலாரும்.
வயதெல்லை - 23ற்கு மேல்
ஓய்வூதியர்களும் விண்ணப்பிக்கலாம்.

**074 281 3747, 076 781 7238** (CS 43835) (3/6)

## பணியாளர் தேவை

யாழ்நகரில் புதிதாக அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு றைஸ், பிரியாணி, பீட்சா போன்ற உணவுகள் மற்றும் யூஸ், சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும் அனுபவம் உள்ள பணியாளர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.

(CS 43856) (2.6)

**077 201 7824, 071 305 5498**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
**02/04/2022**

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level - I ,II

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat [ Sri Lanka]**
**[AA1, AA2, AA3]**

G.C.E. A/L பெறுபேற்றினை எதிர் பார்திருப்பவர்களும் கற்கலாம்.

**Certificate Course in English**

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382
021 222 9149
077 440 5917

(CR 37729) (3/6)

## காணி வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதிகள் நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, கோப்பாய், பலாலி வீதி, K.K.S வீதி போன்ற இடங்களில் பிரதான வீதியுடன் காணி வாடகைக்குத் தேவை. (கல்தூண் அரிந்து விற்பதற்கு)

(CS 19121) (3/6) **076 527 3307, 075 673 1435**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 90 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து 50m நடைதூரம். A32 பிரதான் வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 340 தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை, ஒரு பரப்பின் விலை 450000.00,
(தரகர் தேவையில்லை) (CS 19126) (4/6)

**ஜெயம்:-077 814 7389, 077 241 7589**


# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 08 - 1937



மறைவு
29 - 03 - 2022

## அப்புத்துரை இராசமணி

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இராசமணி நேற்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்நதார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதிகளின் மருமகளும், அப்புத்துரையின் அன்பு மனைவியும் சத்தியராஜ், சத்தியபாலன், சத்தியஜீவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரி, கோனாரா, சரோஜாதேவி, கலாமதி ஆகியோரின் மாமியாரும், உதயசத்தியா, பிரமோதி சத்தியா, சந்துனி சத்தியா, ஜோனார்த்தன், நிருபன், ஓமேஸ் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, குணரட்ணம், நடராசா, தியாகராசா, இரத்தினம், மகேஸ்வரி, புஷ்பராணி மற்றும் மங்கையர்க்கரசி, நமசிவாயம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பாக்கியம், கனகம்மா, நாகராசா, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 39319) (3/5)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 100 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை

- ✓ இரண்டு பரப்பாகவும், 11/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200 M தூரத்தில்
- ✓ சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- ✓ நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- ✓ நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- ✓ அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ✓ ஒரு பரப்பின் விலை (350000/= ) மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்.




**தொடர்பு: 074 291 3725**
**074 291 3726**
**074 291 3727**

(CS 19124) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.